2023 மார்ச் 29] [திரு. மு.க. ஸ்டாலின்]

எதுவும் பார்க்காமல் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கொலையாளிகள் உடனடியாகக் கைது செய்யப்படுகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, என் விளக்கத்தை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2023-2024, முன்மொழிதல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

Message

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby give my recommendation, to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2023–2024."

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 40 – நீர்வளத் துறை

(ஆ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 40 – நீர்வளத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்*